**26.01.2020**

## பத்திரிக்கை செய்தி

## சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தில் 71வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது

71வது குடியரசு தின விழா இன்று (26-01-2020) கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்றது. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், திரு. பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

குடியரசு தின விழா கொண்டாட்டத்தின் போது சக ஊழியர்களிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது, இதில் மூன்று வெளிப்புற விளையாட்டுப் போட்டிகள் (சுறுசுறுப்பான நடை, பின்னோக்கி நடை மற்றும் மெதுவான மிதிவண்டி போட்டி) மற்றும் மூன்று உள் விளையாட்டுப் போட்டிகள் (இறகுபந்து, டேபிள் டென்னிஸ், கேரம்) ஆகிய இரு வெவ்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர். இதில், பங்கேற்றவர்களில் 57 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், திரு. பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப அவர்கள் பரிசுகளை வழங்கினார். கூடுதலாக, ஜனவரி 5, 2020 அன்று நடத்தப்பட்ட சென்னை ரன்னர்ஸ் மாரத்தானின் 18 வெற்றியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் [திருமதி. சுஜாதா ஜெயராஜ் (நிதி), திரு எல். நரசிம் பிரசாத் (இயக்கம் மற்றும் அமைப்புகள்)], உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.